1st February 1972]

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, வாடகைக் கார் ஓட்டுகிறவர்கள் பலருக்கு லைசென்சு இல்லை. லைசென்சு இல்லாமலே ஓட்டுகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. ஓட்டுபவர்களுக்கு 'டிஸ்க்' ஒன்று கொடுக்கிறார்கள். அந்த டிஸ்கை லைசென்சு பெற்றிருப்பவர்கள் அவர்கள் லைசென்சு, இல்லாதவர்களுக்குக் கொடுத்து அவர்கள் நகரத்தில் கார்களை ஓட்டுவதாகச் சொல்கிறார்கள். இது அமைச்சருக்குத் தெரியுமா? அதையறிந்து நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அப்படி ஏதேனும் தகவல் இருந்தால், அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டால், தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஜி. சுவாமிநாதன்: நான் அறிந்த அளவில் அது பெருமளவில் நடப்பதாகத் தெரிகிறது. லைசென்சு பெற்றவர்கள் ஏழெட்டு மணி நேரம் ஓட்டிவிட்டு மாலை நேரத்தில் அந்த டிஸ்கை சாதாரணமானவர்களிடம் கொடுத்து அவர்கள் காரை ஓட்டுவதாகவும் அதனால் பல இடையூறுகள் ஏற்படுவதாகவும் தெரிகிறது. அதை அமைச்சர் அவர்கள் கவனிப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பொதுவாக இதுபற்றி அரசாங்கம் நல்ல முறையில் கவனிக்கும். ஆனால் 'ஸ்பெசிபிக்காக' குறிப்பிட்ட வகையில் ஏதேனும் புகார் இருந்தால், மேலும் அது அரசிற்கு வசதியளிப்பதாக இருக்கும்.

MR. CHAIRMAN: Questions are over.

[*Note*.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

III. ANNOUNCEMENT *re* MESSAGE FROM THE ASSEMBLY.

MR. CHAIRMAN: I have received a message from the Hon. Speaker, Legislative Assembly, transmitting a copy of the Madras City Tenants' Protection (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 1 of 1972) as passed by the Legislative Assembly and signed by him for the concurrence of the Council.

THIRU G. SWAMINATHAN: Sir, there is a Call Attention Notice to-day.........(interruption).

MR. CHAIRMAN: The hon. Member may please wait. Rule 42 (3) has to be suspended. I am taking it up now.

IV. GOVERNMENT MOTION *re* SUSPENSION OF RULE 42(3) OF THE COUNCIL RULES.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மேலவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை விதிகளைச் சேர்ந்த 42-வது விதி, அதன் (3) துணைவிதியில் கொடுத்துள்ள வரம்பைப் பொறுத்த வரையில், தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படுவதுடன் அவ்விதியின் கீழ் ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்களை இன்று எழுப்ப அனுமதிக்கப்பட வேண்டும்"

என்ற தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.